# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.6.5.A

எண்ணியல் - பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு பயிற்சி 1.5 - 1-5

## எண்ணியல் - பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு பயிற்சி 1.5 - 1-5

1. மாலினி 13.92 மீ, 11.5 மீ மற்றும் 10.64 மீ அளவுடைய மூன்று ரிப்பன்களை வாங்கினாள் எனில், ரிப்பனின் மொத்த நீளத்தைக் காண்க.

மாலினி வாங்கிய ரிப்பன்களின் நீளங்கள் முறையே
13.92 மீ, 11.5 மீ, 10.64 மீ

ரிப்பன்களின் மொத்த நீளம் = 13.92 + 11.5 + 10.64

= 36.06 மீ

13.92
11.50
(+)10.64
36.06

∴ மாலினி வாங்கிய ரிப்பன்களின் மொத்த நீளம் 36.06 மீ ஆகும்.

2. சித்ரா இனிப்பு தயாரிக்க 10 கி.கி 35 கி நெய் வாங்குகிறார். அதில் 8 கி.கி 59 கி நெய்யைப் பயன்படுத்துகிறார் எனில், மீதமுள்ள நெய்யின் அளவைக் காண்க.

1 கி.கி = 1000 கிராம் எனவே, 35 கி = $\frac{35}{1000}$ = 0.035 கி.கி , 59 கி = $\frac{59}{1000}$ = 0.059 கி.கி

சித்ரா இனிப்புத் தயாரிக்க வாங்கிய நெய்யின் அளவு = 10.035 கி.கி

சித்ரா பயன்படுத்திய நெய்யின் அளவு = 8.059 கி.கி

∴ மீதமுள்ள நெய்யின் அளவு = 10.035 - 8.059 = 1.976 கி.கி

10.035
(-) 8.059
1.976

∴ சித்ராவிடம் மீதமுள்ள நெய்யின் அளவு 1.976 கி.கி ஆகும்.

3. ஒரு பால் குப்பியின் கொள்ளளவு 2.53 லி எனில், அதேபோன்ற 8 குப்பிகளில் நிரப்ப எவ்வளவு பால் தேவைப்படும்?

ஒரு பால் குப்பியின் கொள்ளளவு = 2.53 லி

∴ அதே போன்ற 8 குப்பிகளில் நிரப்பத் தேவைப்படும் பாலின் அளவு = 2.53 × 8 = 20.24 லி

2 . 5 3
× 8
2 0 . 2 4

∴ 8 குப்பிகளில் நிரப்பத் தேவைப்படும் பாலின் அளவு 20.24 லி ஆகும்.

4. ஒரு கூடை ஆரஞ்சின் எடை 22.5 கி.கி ஒரு குடும்பத்திற்குத் தேவைப்படும் ஆரஞ்சின் எடை 2.5 கி.கி எனில், அதனை எத்தனை குடும்பங்களுக்குச் சமமாகப் பங்கிட முடியும்?

ஒரு கூடை ஆரஞ்சின் எடை = 22.5 கி.கி

ஒரு குடும்பத்திற்கு தேவைப்படும் ஆரஞ்சின் எடை = 2.5 கி.கி

22.5 கி.கி ஆரஞ்சுப் பழத்தை 2.5 கி.கி என சமமாகப் பங்கிட, கிடைக்கும் பங்குகளின் எண்ணிக்கை = $\frac{22.5}{2.5} = \frac{22.5 \times 10^1}{2.5 \times 10^1}$

$= \frac{22.5 \times 10}{2.5 \times 10} = \frac{225}{25} = 9$

25 ) 225 ( 9
225
0

∴ 22.5 கி.கி ஆரஞ்சுப் பழங்களை 9 குடும்பங்களுக்குச் சமமாகப் பங்கிட முடியும்.

5. ஒரு ரொட்டி சுடுபவர் 10 சம அளவிலான கேக்குகளை தயாரிப்பதற்கு 3.924 கி.கி சர்க்கரை பயன்படுத்தினார் எனில், ஒவ்வொரு கேக்கிற்கும் பயன்படுத்தப்படும் சர்க்கரையின் அளவைக் காண்க.

ரொட்டி சுடுபவர் 10 சம அளவிலான கேக்குகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்திய சர்க்கரையின் அளவு = 3.924 கி.கி

∴ ஒவ்வொரு கேக்கிற்கும் பயன்படுத்திய சர்க்கரையின் அளவு = $\frac{3.924}{10}$ = 0.3924 கி.கி

∴ ரொட்டி சுடுபவர் ஒவ்வொரு கேக்கிற்கும் பயன்படுத்திய சர்க்கரையின் அளவு 0.3924 கி.கி ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/WyXWp_U822M


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 31st October, 2022 :: 06:35 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.